மில்க்வைற் இலவச வெளியீடு:

உ

சிவமயம்



சுந்தரமூர்த்தி சுவாமிகள்

அருளிச் செய்த

# மழைப்பதிகம்

என வழங்கும்

# திருப்புன்கூர்த் திருப்பதிகம்

வெளியிடுவோர்:

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7233

1974

# நால்வர் காட்டிய நல்வழி

எங்கள் சமயகுரவர் நால்வரும் நாமெல்லோரும் உய்யும் வழியை நமக்குக் காட்டியுள்ளார்கள். அவர்கள் கால்நடையாகவே நூற்றுக்கணக்கான திருக்கோயில்களுக்குச் சென்று திருமுறைகள் பாடியருளி மக்களுக்குச் சமயப்பற்று, தமிழ்ப்பற்று, நாட்டுப்பற்று, கடவுட்பக்தி உண்டாகுமாறு செய்தார்கள். தமக்கு இறைவன் கொடுத்தருளிய பொன்னையும் பொருளையும் கொண்டு அடியார்களுக்கு அன்னமளித்தார்கள். இறைவன் வேறு, அடியார்கள் வேறல்லர். இறைவன் அடியார்கள் மனத்துள்ளான். ஆகவே நாங்கள் எமக்குக் கிடைக்கும் பொருளில் ஒரு பகுதியையேனும் அடியார்களுக்கும், ஏழைகளுக்கும் பயன் செய்வோமாக.

அறஞ்செய விரும்பு.

"திருஆலவாய்"
யாழ்ப்பாணம்.

க. கனகராசா ஜே. பி.

உ

சிவமயம்

# மழைப்பதிக வரலாறு

முன்னொரு காலத்திலே நாட்டில் பருவமழை பெய்யத் தவறியதால் நாடெங்கும் வரட்சியும் வெப்பமும் பஞ்சமும் அதிகரித்து மக்கள் நோய்வாய்ப்பட்டனர். அதுகண்டு மன்னனும் மனங்கலங்கியபோது திருப்புன்கூர்த் திருப்பதிக்குச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் எழுந்தருளினார்கள். திருக்கோயிலுக்குப் பன்னிரு வேலி நிலம் எழுதிக்கொடுத்த மன்னன் கண்முன்னே கனத்த மழை பெய்து நாடெங்கும் வெள்ளம் உண்டானது. அதனால் மக்கள் மேலும் வருந்தியபோது மன்னன் மீண்டும் பன்னிரு வேலி நெல்வயல் கோயிலுக்கு எழுதிக் கொடுத்ததும் மழை ஓய்ந்து வெள்ளமும் படிந்தது என்பது வரலாறு. அதனால் இத்திருப்பதிகத்துக்கு மழைப்பதிகம் எனப் பெயர் வழங்குவதாயிற்று. இதனைப் பக்தியோடு ஓதினால் மழைவளம் உண்டாகும். நாங்கள் எங்கள் கோயில்களில் இதனை ஓதி மழைவேண்டுவோமாக.

''திருஆலவாய்'' க. கனகராசா ஜே. பி.
7-12-74

உ
சிவமயம்

# சுந்தரமூர்த்தி சுவாமிகள்
அருளிச் செய்த

# மழைப்பதிகம் என வழங்கும்
# திருப்புன்கூர்த் திருப்பதிகம்

பண் — தக்கேசி

திருவடிகளைக் குறிப்பன

திருச்சிற்றம்பலம்

1.

அந்த ணாளனுன் அடைக்கலம் புகுந்த
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்றன் ஆருயி ரதனை
வவ்வி னாய்க்குன்றன் வன்மைகண்
டடியேன்
எந்தை நீயெனை நமன்தமர் நலியில்
இவன்மற் றென்னடி யானென விலக்கும்
சிந்தை யால்வந்துன் திருவடி அடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானே.

திருப்புன்கூர் என்னும் வளம்பொருந்திய சோலைகள் சூழ்ந்த திருப்பதியில் எழுந்தருளியுள்ள இறைவனே! அந்தணச் சிறுவனாகிய மார்க்கண்டேயன் தேவரீரைச் சரணடைந்தபோது, அவனைக் காப்பதன் பொருட்டு எதிர்த்துவந்த இயமனை இறந்துபோம்படி செய்தருளிய செயலைக்கண்டு, அடியேனும் தந்தையாகிய தேவரீர் என்னையும் இயமதூதுவரிடமிருந்து, "இவனும் என் அடியான்" என்று விலக்கி அருள்வீர் என்னும் எண்ணத்தால் வந்து திருவடியைச் சேர்ந்தேன்.

2.

வையகம் முற்று மாமழை மறந்து
வயலில் நீரிலை மாநிலந் தருகோம்
உய்யக் கொள்கமற் றெங்களை என்ன
ஒளிகொள் வெண்முகி லாய்ப்பரந் தெங்கும்
பெய்யும் மாமழைப் பெருவெள்ளந் தவிர்த்துப்
பெயர்த்தும் பன்னிரு வேலிகொண் டருளும்
செய்கை கண்டுநின் திருவடி அடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானே.

உலகம் முழுவதும் மழை இல்லாமையால் வயலில் நீர் இல்லை. அதிக நிலம் தருவோம். மழை பெய்வித்துக் காத்தருளுக என்று வேண்டுதல் செய்ய, ஒளி பொருந்திய வெண்முகிலாகி எங்கும் பரந்து பெய்கின்ற மழை பெரிய வெள்ளமானதும், அந்த வெள்ளத்தை ஒழிப்பதற்கு மழையை நிறுத்துவதற்காகப் பின்னரும் பன்னிரண்டு வேலிநிலம் கொண்டருளிய திருவருளை அறிந்து தேவரீர் திருவடியைச் சேர்ந்தேன்.

3.

ஏத நன்னிலம் ஈரறு வேலி
ஏயர் கோனுற்ற இரும்பிணி தவிர்த்துக்
கோத னங்களின் பால்கறந் தாட்டக்
கோல வெண்மணற் சிவன்தன்மேற்
சென்ற
தாதை தாளற எறிந்தசண் டிக்குன்
சடைமி சைமலர் அருள்செயக் கண்டு
பூத ஆளிநின் பொன்னடி அடைந்தேன்
பூம்பொ ழில்திருப் புன்கூ ருளானே.

பன்னிரு வேலி வயல் கொடுத்த ஏயர்கோன் கலிக்காமநாயனாரின் நோயை நீக்கியருளியதும், பசுக்கூட்டங்களில் பால்கறந்து வெண்மணலாற் சிவலிங்கம்

செய்து அபிடேகஞ் செய்ததைப் பொறாது சிதைக்கப் போன தந்தையின் கால்களை வெட்டிய சண்டேசுர நாயனாருக்குத் தேவரீர் சடையிற் சூடிய கொன்றை மாலையை அருளியதும், ஆகிய திருவருட் செயல்களைக் கண்டு பூதங்களுக்குத் தலைவராகிய தேவரீரின் திரு வடியைச் சேர்ந்தேன்.

4.

நற்றமிழ் வல்ல ஞான சம்பந்தன்
நாவினுக் கரையன் நாளைப்போ வானும்
கற்ற சூதனற் சாக்கியன் சிலந்தி
கண்ணப் பன்கணம் புல்லனென் றிவர்கள்
குற்றம் செய்யினும் குணமெனக் கருதும்
கொள்கை கண்டுநின் குரைகழல் அடைந்தேன்
பொற்றி ரண்மணிக் கமலங்கள் மலரும்
பொய்கை சூழ்திருப் புன்கூ ருளானே.

திருஞானசம்பந்த நாயனார், திருநாவுக்கரசு நாயனார், திருநாளைப்போவார், மூர்க்க நாயனார், சாக்கிய நாயனார், சிலந்திப்பூச்சி, கண்ணப்ப நாயனார், கணம் புல்ல நாயனார் ஆகிய இவர்கள் குற்றங்கள் செய்தா

னும் அவற்றை எல்லாம் குணமாகக் கொண்டு அருள் செய்த தேவரீரின் திருவருட் குறிப்பை அறிந்து வீரக் கழல்களை அணிந்தருளிய தங்கள் திருவடியைச் சேர்ந் தேன்.

5.

கோல மால்வரை மத்தென நாட்டிக்
   கோளர வுசுற்றிக் கடைந்தெ ழுந்த
ஆல நஞ்சுகண் டவர்மிக இரிய
   அமரர் கட்கருள் புரிவது கருதி
நீலம் ஆர்கடல் விடந்தனை உண்டு
   கண்டத் தேவைத்த பித்தநீ செய்த
சீலம் கண்டுநின் திருவடி அடைந்தேன்
   செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானே.

மந்தர மலையை மத்தாக நிறுத்தி, வாசுகியாகிய பாம்பைத் தாம்பாகச் சுற்றித் திருப்பாற் கடலைக் கடைந்தபோது எழுந்த ஆலகால விடத்தைக் கண்டு தேவர்களும், அசுரர்களும் அஞ்சி ஓடியபோது, தேவர் களைக் காப்பதற்காக நீலநிறம் பொருந்திய அந்த விடத் தைப் பானம் பண்ணித் திருமிடற்றிலே தரித்தருளிய பித்தராகிய தேவரீர் செய்தருளிய அருள் இரக்கக் குணத்தைக் கண்டு திருவடியைச் சேர்ந்தேன்.

6.

இயக்கர் கின்னரர் யமனொடு வருணர்
இயங்கு தீவளி ஞாயிறு திங்கள்
மயக்கம் இல்புலி வானரம் நாகம்
வசுக்கள் வானவர் தானவர் எல்லாம்
அயர்ப்பொன் றின்றிநின் திருவடி அதனை
அர்ச்சித் தார்பெறும் ஆரருள் கண்டு
திகைப்பொன் றின்றிநின் திருவடி
அடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானே.

கந்தர்வர், கின்னரர், இயமன், வருணர், அக்கினி, வாயு, சூரியன், சந்திரன், புலி, குரங்கு, பாம்பு, வசுக்கள், தேவர்கள், அசுரர்கள் ஆகிய எல்லோரும் சோர்வின்றித் தேவரீர் திருவடிகளை வழிபட்டார்கள். அவர்கள் பெற்ற பெறுதற்கரிய பெரிய பேறுகளைக் கண்டு அடியேனும் மயக்கம் இல்லாமல் தேவரீரின் திருவடியைச் சேர்ந்தேன்.

7.

போர்த்த நீள்செவி யாளர்அந் தணர்க்குப்
பொழில்கொள் ஆலநிழற் கீழறம் புரிந்து
பார்த்த னுக்கன்று பாசுப தங்கொடுத்
தருளி னைப்பண்டு பகீரதன் வேண்ட

ஆர்த்து வந்திழி யும்புனற் கங்கை
    நங்கை யாளைநின் சடைமிசைக் கரந்த
தீர்த்த னேநின்றன் திருவடிய டைந்தேன்
    செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானே.

பொத்தில நீண்ட செவிகளையுடைய சனகர் முதலாய அந்தணர்களுக்கு சோலைபோன்ற கல்லால மரத்தின் கீழமர்ந்து தர்மத்தைப் போதித்ததும், அரிச்சுனனுக்குப் பாசுபதம் கொடுத்தருளியதும், பகீரதன் வேண்டிக்கொண்டபோது ஆரவாரித்து வந்த ஆகாய கங்கையைச் சடையிலே தங்கவைத்தருளியதும் ஆகிய திருவருட் செயல்களைச் செய்த புனிதனே தேவரீரின் திருவடியைச் சேர்ந்தேன்.

8.

மூவெயில் செற்றஞான் றுய்ந்த மூவரில்
    இருவர் நின்திருக் கோயிலின் வாய்தல்
காவ லாளரென் றேவிய பின்னை
    ஒருவ நீகரி காடரங் காக
மானை நோக்கியோர் மாநட மகிழ
    மணிமு ழாமுழக் கவருள் செய்த
தேவ தேவநின் திருவடிய டைந்தேன்
    செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானே.

முப்புரங்களையும் எரித்த காலத்தில் சாவாது பிழைத்த மூவரில் இருவரைத் துவார பாலகராக வாயில் காவல் செய்யவும், மற்றவனைத் தேவரீர் சுடுகாடே அரங்காகக் கொண்டு உமாதேவியார் மகிழுமாறு பெரிய கூத்தாடும்போது பெரிய முழவினை முழக்கும்படியும் அருள் செய்த தேவரீரின் திருவடியைச் சேர்ந்தேன்.

9.

அறிவி னான்மிக்க அறுவகைச் சமயம்
அவ்வவர்க் கங்கே ஆரருள் புரிந்து
எறியும் மாகடல் இலங்கையர் கோனைத்
துலங்க மால்வரைக் கீழடர்த் திட்டுக்
குறிகொள் பாடலின் இன்னிசை கேட்டுக்
கோல வாளொடு நாளது கொடுத்த
செறிவு கண்டுநின் திருவடி யடைந்தேன்
செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானே.

மெய் அறிவினால் மேம்பட்ட சைவம் முதலாய ஆறுவகையான அகச்சமயத்தவருக்கும் அரிய திருவருளைச் செய்து, பெரிய கடல்சூழ்ந்த இலங்கையரசனை இராவணன் நடுங்குமாறு அவனைத் திருக்கைலாய மலையின் கீழ் நசுக்கி, பின் அவன் பாடிய இன்னிசை கேட்டு இரங்கி, அழகிய வாளும், வாழ்நாளும் கொடுத்தருளிய திருவருளைக் கண்டு அடியேனும் தேவரீர் திருவடியைச் சேர்ந்தேன்.

10.

கம்ப மால்களிற் றின்னுரி யானை
காமற் காய்ந்ததோர் கண்ணுடை
யானைச்
செம்பொ னேயொக்கும் திருவுரு வானைச்
செழும்பொ ழில்திருப் புன்கூ ருளானை
உம்பர் ஆளியை உமையவள் கோனை
ஊரன் வன்தொன்டன் உள்ளத்
தாலுகந்து
அன்பி னாற்சொன்ன அருந்தமி ழைந்தோ
டைந்தும் வல்லவர் அருவினை இலரே.

அசைகின்றதும், மதமயக்கத்தை உடையதுமான யானையின் தோலையுடையவனை, மன்மதனை எரித்த நெற்றிக்கண்ணினையுடையவனை, செந்நிறம் பொருந்திய பொன்போன்ற திருமேனியை யுடையவனை, திருப்புன் கூர்த் திருப்பதியில் எழுந்தருளியுள்ளவனை, தேவர்களில் சிறந்தவனை, உமாதேவியாரின் தலைவனை, ஊரனாகிய வன்தொண்டன் மனத்தால் விருப்பங்கொண்டு அன்பினால் சொன்ன அருந்தமிழ்ப் பாடல்கள் பத்தும் கற்று ஓதவல்லவர்கள் வினைகள் இல்லாதவராவர்.

திருச்சிற்றம்பலம்

தயாரித்தவர்:

க. சி. குலரத்தினம்

உ

## அன்பான வேண்டுகோள்

மில்க்வைற் உற்பத்திப் பொருள்களுக்கு நீங்கள் அமோகமாக ஆதரவளித்தால் நாங்கள் இத்தகைய இலவச வெளியீடுகளைப் பிரசுரித்து அன்பளிப்புச் செய்ய உதவியாகும்.

பார்த்து வாங்குங்கள் "மில்க்வைற்"

---

இப் புத்தகத்தை வாசித்த பின்னர் தயவுசெய்து பிறருக்குங் கொடுத்து உதவுங்கள்.

ஒரே செலவில் நமக்கும் பிறர்க்கும்
நயம்வர வாய்ப்பான வழியை
நாடுதல் உத்தமமல்லவா?

நாடு நலம்பெற நாம் நற்சேவை செய்ய
எமது உற்பத்திப் பொருள்களை
வாங்கி உபயோகியுங்கள்.

வணக்கம்.

---

- மில்க்வைற் நீலசோப் ○ நியூ மில்க்வைற் சோப்
- மில்க்வைற் 30 சதம் சோப், *15* சதம் சோப்
- மில்க்வைற் பார் சோப் ○ மில்க்வைற் சலவைப் பவுடர்
- மில்க்வைற் மெடிக்கேட்டற் சோப்
- நீம் வாசனை சோப் (வேப்பெண்ணை கலந்தது)

*வாங்கிப் பாவித்து அதிக லாபம் அடையுங்கள்.*

---

# மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7233 தந்தி: "மில்க்வைற்"

கிளை: 79, மெசென்ஜர் வீதி, கொழும்பு-12

தொலைபேசி: 36063

---

*சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம்.*